நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: உழந்தும் உழவே தலை!**

First Published : 20 Jun 2011 01:19:39 AM IST
Last Updated : 20 Jun 2011 04:26:36 AM IST

தமிழக முதல்வர் ஜெயலலிதா தான் பொறுப்பேற்ற பின்னர் நடத்திய முக்கிய ஆய்வுக் கூட்டங்களில் ஒன்று வேளாண்மை குறித்து நடத்திய விரிவான ஆய்வுக் கூட்டம். தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உணவு உற்பத்திக்கான சாதனை இலக்கை நிர்ணயித்துள்ளார் ஜெயலலிதா.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி இலக்கு அதிகபட்சமாக 2010-11-ம் நிதியாண்டுக்கு 85 லட்சம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், தற்போது இதை 115 லட்சம் டன்னாக உயர்த்தி, வேளாண் துறையை முடுக்கிவிட்டுள்ளார் தமிழக முதல்வர். இந்தச் சாதனையை எட்டுவதற்குச் சென்ற ஆண்டைக் காட்டிலும் கூடுதலாக 6 லட்சம் ஹெக்டேர் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக, நெல் சாகுபடியில் 2 லட்சம் ஹெக்டேர் பரப்பு அதிகரிக்கப்பட வேண்டும். அதாவது மொத்தம் 22 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெற்றாக வேண்டும். இதில் 9 லட்சம் ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி நடைபெற வேண்டும். அதேபோன்று பருப்பு, தானிய வகைகளிலும் சாகுபடிப் பரப்பு ஒன்றரை லட்சம் ஹெக்டேர் அதிகரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

இவை வழக்கமான நடவடிக்கையாக இல்லாமல், திட்டமிடப்பட்ட சாதனையாக மாற்ற வேண்டிய மேலதிகமான பொறுப்பு இத்துறையை நிர்வகிக்கும் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், வேளாண் துறை அதிகாரிகளுக்கு உள்ளது. முதல்வரின் கட்டளையை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று நம்பலாம். இருப்பினும் இந்தத் திட்டங்கள் அனைத்தும் எதிர்பார்த்தபடியே நிறைவேற வேண்டுமானால், சில விஷயங்களில் முதல்வர் தீவிர கவனம் செலுத்தினாலொழிய நடைபெறாது. அவை: விவசாயிகளுக்கான பயிர்க்கடன், தட்டுப்பாடு இல்லாமல் உரம், பாசன மேலாண்மை, தட்டுப்பாடு இல்லாமல் பண்ணை வேலையாள்கள் கிடைத்தல் ஆகியன இன்றியமையாதன.

அகில இந்திய அளவில் சென்ற நிதியாண்டு பயிர்க்கடன் ரூ. 4.26 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை புள்ளிவிவரம் தருகிறது. வேளாண் கடனால், வட இந்திய மாநிலங்கள்தான் அதிக அளவு பயனடைந்துள்ளன . நிகழாண்டில் சாதனையை நிகழ்த்த

வேண்டும் என்றால், விவசாயிகளுக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கிடைக்கும் வேளாண் கடன் தடையின்றிக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இந்தக் கடன்களைப் பெற்றுத் தருவதற்காக, வேளாண் அதிகாரிகள் உதவி செய்யும்படி பணிக்கலாம்.

அடுத்ததாக, உரத்தட்டுப்பாடு என்பது தமிழகத்தின் தொடர்கதையாக இருக்கிறது. உரங்களை வாங்கிப் பதுக்கிவைத்து அதிகவிலைக்கு விற்கும் நிலைமை தொடர்கிறது. இதைத் தவிர்க்க, இந்தப் பதுக்கல் பேர்வழிகளைக் கண்டுபிடித்து உரங்களை மீட்கத் தனிப்படை அமைக்க வேண்டும். உரங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டால் அரசியல் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிகழாண்டு மழை பரவலாகப் பெய்துள்ளதால், நிலத்தடி நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. இருப்பினும், சில வறட்சியான பகுதிகளில் நிலத்தடி நீர் தொழில்ரீதியாக உறிஞ்சியெடுக்கப்படுகிறது. ஊரகப் பகுதியில் நிலத்தடிநீரை உறிஞ்சியெடுத்து, நகர்ப்புறங்களில் உள்ள தொழிற்கூடங்களுக்கு விற்கவும் செய்கிறார்கள். ஹரியாணா உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கில், கட்டட வேலைகளுக்காக நிலத்தடி நீரை உறிஞ்சுவது தடுக்கப்பட வேண்டும் என்றும், கட்டட வேலைகளுக்கு மறுசுழற்சி செய்யப்படும் நீரைப் பயன்படுத்த ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பது ஆய்வுக்குரியது. ஆனாலும், நிலத்தடி நீரை வேளாண்மைக்கும், குடிநீருக்கும் தவிர, மற்ற பயன்பாட்டுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் உறிஞ்சியெடுப்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பண்ணை வேலையாள்கள் கிடைப்பதுதான் மிகவும் அரிதாக இருக்கிறது. இதற்குக் காரணம் பெரும்பாலான பண்ணை வேலையாள்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்துவிட்டனர். இருக்கிற ஒரு சிலரும், மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் குறைந்தபட்சக் கூலியே போதும் என்று, பண்ணை வேலையைப் புறக்கணிக்கும் மனநிலையில் உள்ளனர். இதற்குக் காரணம், மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணி செய்தால் அதற்கு எந்தவிதமான பொறுப்பேற்பும், செய்யவேண்டிய வேலைஅளவும் கிடையாது. ஒப்புக்குப்போய் கூலி வாங்கி வரலாம் என்பதாக இருக்கிறது.

மத்திய அரசின் இந்தத் திட்டம், விவசாய வேலைகள் இல்லாமல் போகும் காலத்தில் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தெளிவான விதிமுறை இருந்தும்கூட, அரசு அதிகாரிகளும் உள்ளாட்சிப் பதவியில் இருப்போரும் இதைக் கண்டுகொள்வதே இல்லை. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். ஒரு கிராமத்தில் விவசாய வேலைக்கான வாய்ப்பு இருக்கும்போது, இத் திட்டத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது, மீறிச் செய்தால் அந்தப் பணம் அந்த அரசு ஊழியரின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் என்று கடுமையான உத்தரவு பிறப்பித்தால் மட்டுமே இந்தத் தவறான நடைமுறைக்கு முற்றுப்புள்ளி ஏற்படும்.

மேலும், மூன்று போகம் விவசாயம் நடைபெறும் பகுதிகளில் இத் திட்டத்தை எடுத்துக் கொள்ளாமல் தவிர்ப்பதும் நல்லதே. ஒரு போகம் விளையும் இடங்களில் அந்தச் சாகுபடி முடியும்வரை இத் திட்டத்தை நிறுத்திவைத்து, சாகுபடி முடிந்த பின்னர் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பண்ணை வேலையாள்கள் தட்டுப்பாடு ஏற்படாது.

முன்னெப்போதும் இல்லாதவகையில் தமிழக முதல்வர் வேளாண்மையில் இந்தச் சாதனையைச் செய்தாக வேண்டும். ஏனென்றால், எல்லா குடும்ப அட்டைகளும் 20 கிலோ இலவச அரிசியை வாங்கத் தொடங்கி விட்டார்கள். இத் திட்டத்தைத் தொய்வின்றித் தொடர வேண்டுமானால், அரசு இந்த இலக்கை அடைந்தே தீரவேண்டும்.

**வாழைப் பயிரைத் தாக்கும் குருத்து நோய்**

First Published : 20 Jun 2011 08:15:56 AM IST

Last Updated : 20 Jun 2011 09:20:09 AM IST

திண்டுக்கல், ஜூன் 19: வாழைப் பயிரை குருத்து நோய் தாக்கி வருவதால் பயிரிட்டுள்ள விவசாயிகள் செய்வதறியாமல் திணறி வருகின்றனர்.

நோயிலிருந்து பயிரைக் காக்கும் முறையினை தோட்டக் கலைத்துறை மேற்கொள்ள வேண்டும் என வாழை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் நல்லமநாயக்கன்பட்டி, பாலமரத்துப்பட்டி, அழகர்நாயக்கன் பட்டி, அரசனம்பட்டி, நொச்சியோடைபட்டி, தங்க சமுத்திரபட்டி என பெரும்பாலான இடங்களில் ரஸ்தாளி வாழை பயிரிடப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பயிரினை மஞ்சள் நோய் எனும் குருத்து நோய் தாக்கி வருவதால், வாழைத் தோட்டம் வீணாகி வருகிறது.

நோய்த் தாக்குதலில் இருந்து பயிரினைக் காக்க, தோட்டக் கலைத்துறை முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து இப்பகுதியில் 2 ஏக்கர் அளவில் வாழை பயிரிட்டுள்ள விவசாயி சேசுராஜ் கூறியது:

சிறுமலை மலையடிவாரத்தில் உள்ள இப்பகுதிகளில் ரஸ்தாளி வாழை பெருமளவு பயிரிடப்பட்டுள்ளது.

மலையிலிருந்து மூலிகைக் காற்று வீச்சின் காரணமாக, இப்பகுதியில் பயிரிடப்பட்டு வரும் ரஸ்தாளி வாழைக்கு தனிச் சிறப்பு உண்டு. அதாவது, இத்தகைய வாழைப் பழத்தின் தோல் எளிதில் கருப்பு நிறத்திற்கு மாறாமல் இருப்பதுதான் அந்த சிறப்பு.

2 ஏக்கர் பரப்பில் இந்த வாழையைப் பயிரிட ரூ.1 லட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. வாழை நன்றாக விளைந்த பின்னர் செலவு போக ரூ.2 லட்சம் வரை லாபம் கிடைக்கும்.

ஆனால், தற்போது இலைகளை கருக்கி, தண்டுகளை வளரவிடாமல், குலை தள்ளுவதைத் தடுக்கும் வகையில், மஞ்சள் நோய் எனும் குருத்து நோய் வாழைப் பயிரைத் தாக்கியுள்ளதால், குலை தள்ளாமலேயே வாழைகள் வீணாகி வருகின்றன.

நோய்த் தாக்குதலை சமாளிக்கும் வகையினை, தோட்டக்கலைத் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாகும்.

**கொடைக்கானலில் டர்னிப்பு காய் விளைச்சல் அமோகம்**

First Published : 20 Jun 2011 08:18:02 AM IST

Last Updated : 20 Jun 2011 09:20:06 AM IST

கொடைக்கானல்,ஜூன் 19: கொடைக்கானலில் டர்னிப்பு காய் விளைச்சல் அமோகமாக உள்ளது.

கொடைக்கானலில் உருளைக்கிழங்கு,காரட்,பீன்ஸ், நூக்கல்,சௌ,சௌ, டர்னிப்பு, பீட்ரூட், முள்ளங்கி ஆகிய காய்கறிகள் விளைகின்றன. குறைந்த அளவு பராமரிப்பில், அதிக அளவு விளைச்சல் தரக்கூடிய டர்னிப்புக்காயை விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டு வருகின்றனர்.

செண்பகனூர்,பிரகாசபுரம்,கார்மேல்புரம்,சகாயபுரம்,வில்பட்டி, மாட்டுப்பட்டி, அட்டுவம்பட்டி,பள்ளங்கி,கோம்பை,பூம்பாறை ஆகிய கிராமப் பகுதிகளில் டர்னிப்பு விளைவிக்கப்படுகிறது.

இதுகுறித்து, செண்பகனூர் விவசாயி வேலுச்சாமி கூறுகையில், 200 கிராம் டர்னிப்பு விதையை, ஒரு ஏக்கரில் நடவு செய்து அவற்றை பராமரித்து வர வேண்டும். வாரத்திற்கு ஒருமுறை தண்ணீர் கட்ட வேண்டும். குறைந்த அளவு பராமரிப்பு செய்தாலே நல்ல விளைச்சல் கிடைக்கும்.

இந்த டர்னிப்பு மதுரை, தேனி,திருச்சி,திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்படும். லாரி வாடகை,கமிஷன் கூலி வேலையாள்கள் கூலி போக ஓரளவுக்கு லாபம் கிடைக்கும். தற்போது 10 கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதிகமாக மார்க்கெட்டில் விலை கிடைக்கும்போது, விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். ஆனால் இக்காய்களை உண்பதற்கு காட்டெருமை,பன்றி ஆகியவை அதிகமாக வருவதால் கவனமாகப் பாதுகாக்க வேண்டியுள்ளது என்றார்.

**உர வியாபாரிகளுக்கு வேளாண் அதிகாரி எச்சரிக்கை**

First Published : 20 Jun 2011 08:20:06 AM IST

காரியாபட்டி, ஜூன் 18: தடை செய்யப்பட்ட எண்டோசல்பான், லிண்டேன் பூச்சி மருந்துகளை விற்பனை செய்யும் வியாபாரிகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று வேளாண் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து எம்.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது:

உரம், பூச்சி மருந்து இருப்பு, விலை விவரம் ஆகியவற்றை உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்கள் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும். முதன்மைச் சான்று இணைக்கப்பட்ட உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

உரம், பூச்சி மருந்து விற்பனை செய்யும்போது விற்பனை ரசீதில் விவசாயியின் கையொப்பம் பெற வேண்டும்.

எண்டோசல்பான், லிண்டேன் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யத் தடை செய்யப்பட்டுள்ளதால் விற்பனை செய்யக்கூடாது. மீறும் பட்சத்தில் விற்பனை நிலையங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்றார்.

**சிவகங்கை மாவட்டத்தில் 9.35 லட்சம் பழ மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு**

First Published : 20 Jun 2011 08:39:41 AM IST

Last Updated : 20 Jun 2011 09:11:46 AM IST

சிவகங்கை, ஜூன் 19:÷சிவகங்கை மாவட்டத்தில் 2011-2012 நிதி ஆண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் 9 லட்சத்து 35 ஆயிரம் பழ மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து சிவகங்கை தோட்டக் கலை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் தெரிவித்ததாவது:÷சென்னையில் உள்ள தமிழ்நாடு தோட்டக் கலை வளர்ச்சி முகமையின் (டான்ஹோடா) கட்டுப்பாட்டில், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் 200 ஏக்கர் பரப்பிலும், குன்றக்குடி அருகில் உள்ள நேமத்தில் 90 ஏக்கர் பரப்பிலும் அரசு தோட்டக் கலைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

÷இப்பண்ணைகள் மூலம் பல்வேறு அரசு திட்டங்களின் அடிப்படையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் கன்றுகள் வழங்கப்படுகிறது.

÷இப் பண்ணைகளுக்கான 2011-2012 உற்பத்தி செயல் திட்டத்தை டான்ஹோடா மேலாண்மை இயக்குநர் அங்கீகரித்து ஆணை வழங்கியுள்ளார். இதன்படி இந்த ஆண்டு தேவகோட்டை அரசு தோட்டக் கலைப் பண்ணையில் 60 ஆயிரம் மா ஒட்டு கன்றுகள், 3 லட்சம் முந்திரி ஒட்டு கன்றுகள், 1.50 லட்சம் மல்லிகை பதியன் கன்றுகள், 31 ஆயிரம் அலங்காரச் செடிகள், 10 ஆயிரம் தேக்கு மரக்கன்றுகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட உள்ளன.

÷நேமம் பழப் பண்ணையில் 84 ஆயிரம் மா ஒட்டுக் கன்றுகள், 1.50 லட்சம் முந்திரி கன்றுகள், 25 ஆயிரம் மல்லிகை பதியன்கள் மற்றும் 1.50 லட்சம் கொய்யா, கறிவேப்பிலை, பப்பாளி, அழகுச் செடிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

÷சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 9.35 லட்சம் வீரிய கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட உள்ளது.

÷மேலும், முதன்முறையாக மா வீரிய ஒட்டுக் கன்றுகள் உற்பத்தியில் மாங்கொட்டைகள் முளைத்து இளங்கன்றிலேயே ஒட்டுக்கட்டும் மென்தண்டு ஒட்டு முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அதிக வீரியம் உள்ள 1 லட்சம் ஒட்டுக்கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

÷இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கன்றுகள் தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டம், துல்லிய பண்ணைய திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின்கீழ் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்று சிவகங்கை தோட்டக் கலை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் தெரிவித்தார்.

**"உலர் மலர்களை உற்பத்தி செய்து அதிக லாபம் பெறலாம்'**

First Published : 20 Jun 2011 08:23:13 AM IST

Last Updated : 20 Jun 2011 09:18:13 AM IST

காரியாபட்டி, ஜூன் 18: உலர் மலர்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக லாபம் பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

இந்திய மற்றும் சர்வதேச சந்தையில் உலர் மலர்களுக்கு கிராக்கி மிக அதிகம். இங்கிருந்து உலர் மலர்கள் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம் நாட்டில் பலவித செடிகள் இருப்பதால் உலர் மலர்கள் ஏற்றுமதியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

உலர் மலர்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியாவிற்கு 100 கோடி அன்னிய செலாவணி கிடைக்கிறது.

கைவினைக் காகிதம், பெட்டிகள், புத்தகங்கள், வாழ்த்து அட்டைகள், சணல் பை, அலங்கார புகைப்படம், பரிசுப் பொருள்கள் ஆகியவை செய்ய உலர் மலர்கள் பயன்படுகின்றன.

பொதுவாக மலர்கள், கிளைகள், விதைகள், பட்டைகள் ஆகியவற்றை உலர்த்தியே உலர் மலர்கள் தயாரிக்கப்படுகின்றன. காலையில் மலர்களில் பனித் துளிகள் காய்ந்த பின்பு செடியில் இருந்து பறித்த மலர்கள் மற்றும் வெட்டிய கிளைகள் சிறுகட்டுகளாகக் கட்டப்பட்டு உடனே சூரிய ஒளியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

அறுவடை செய்த மலர்களை சூரிய ஒளியில் உலர்த்துதல், குளிர் உலர்த்துதல், அழுத்த முறை, கிளிசரின் முறை, பாலிசெட் பாலிமர் முறை, சிலிக்கா உலர்த்துதல் ஆகிய முறையில் உலர்த்தலாம்.

புரோசியான் வகை நிறம் உலர் மலர்களுக்கு மிகவும் உகந்ததாகும். முதலில் 4 கிலோ கிராம் அளவு கலர் பொடியை 20 லிட்டர் நீருடன் கலக்க வேண்டும். பின்பு இக்கரைசலை 800 லிட்டர் சுடுநீருடன் சேர்த்து அதனுடன் 2 லிட்டர் அசிடிக் அமிலத்தை சேர்த்து கலக்க வேண்டும்.

மிகவும் மிருதுவான மலர்களின் நிறத்தை கூட்டுவதற்கு மக்னீசியம் குளோரைடு சேர்க்க வேண்டும். உலர் மலர்கள் நிறத்தை உறிஞ்சும் வரை அவற்றை அக்கரைசலில் ஊற வைக்க வேண்டும். இந்த முறையில் உலர் மலர்களை உற்பத்தி செய்யலாம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 108.21 அடி**

First Published : 20 Jun 2011 08:55:57 AM IST

தஞ்சாவூர், ஜூன் 19: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 108.21 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,627 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 12,009 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 4,036 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,554 கன அடி, கொள்ளிடத்தில் 1,029 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**ஜூன் 24-ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

First Published : 20 Jun 2011 08:40:28 AM IST

மானாமதுரை, ஜூன் 19: சிவகங்கையில் வரும் 24-ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) வேம்புலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வேளாண்மை துறை அனைத்து அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்கள் குறைகளைத் தெரிவித்து நிவாரணம் பெறலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளையான்குடி அருகே விபத்தில் ஒருவர் சாவு

மானாமதுரை, ஜூன் 19:÷இளையான்குடியைச் சேர்ந்தவர் கரீம்கனி (47). இவர், கண்மாய் கரை பகுதியில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு பைக்கில் வீட்டுக்குத் திரும்பினாராம். அப்போது, எதிர் திசையில் பைக்கில் வந்த சாலைக்கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் (27) என்பவருடன் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாம்.

÷இதில் பலத்த காயமடைந்த கரீம்கனி மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

÷இதுகுறித்து இளையான்குடி போலீஸôர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

**விதைப் பரிசோதனை செய்ய வேளாண் துறை யோசனை**

First Published : 19 Jun 2011 02:58:03 PM IST

பரமக்குடி, ஜூன் 18: விதைகளை பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதலான மகசூல் பெறலாம் என பரமக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ச.சிவராணி தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் கூறியது:

நல்ல விதையே நல்ல மகசூலைத் தரும். அதனால் இனக் கலப்பில்லாத, புறத்தூய்மையுடைய, அதிக முளைப்புத் திறன் உள்ள, பூச்சி நோய் தாக்காத, போதிய ஈரப்பதம் இருக்கக் கூடிய விதைகளைத் தேர்வு செய்து விதைக்க வேண்டும்.

இதற்காக, விதை மற்றும் அங்ககச் சான்றுத்துறை சார்பில், பரமக்குடி உழவர் பயிற்சி நிலைய வளாகத்தில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

விதை உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் விதையின் தரத்தை உறுதி செய்ய விதை பரிசோதனை செய்ய வேண்டும்.

விதையின் ஈரப்பதம், முளைப்புத் திறன் மற்றும் பிற ரக கலப்பு ஆகியவற்றை மிகத் துல்லியமாகவும், அதன் வம்சா வழியினையும் உறுதி செய்ய விதை பரிசோதனை பயன்படுகிறது.

இவ்வாறு பரிசோதனை செய்வதால், விதையின் திறனை அறிந்து விதை அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

புறத்தூய்மை சோதனை செய்வதால் தூய விதைகள், களை விதைகள், பிற ரக விதைகள் மற்றும் உயிர்ப்பற்ற பொருள்களின் அளவினை அறிய முடியும்.

முளைப்புத் திறன் என்பது விதையின் உயிரும், வீரியமும் கொண்டு இயங்குவதைக் காட்டுகிறது.

நல்ல முளைப்புத்திறன் கொண்டு விதைக்கப்படும் விதை மூலம் பயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

விதையின் ஈரப்பதம் அதன் ஆயுள் காலத்தை நிர்ணயிக்கிறது.

விதையின் ஈரத்தன்மை அதிகரித்தோ, குறைந்தோ இருக்கக் கூடாது. சரியான ஈரப்பதம் உள்ள விதைகளால், பூச்சிநோய் தாக்குதலின்றி நீண்டநாள்கள் தாக்குப்பிடிக்கும் தன்மையில் வளரும்.

இதனால் விவசாயிகள் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்து விதைகளை தேர்வு செய்து பின் விதைப்புச் செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**முயல் வளர்ப்பு முறைகள் இலவச பயிற்சி**

First Published : 19 Jun 2011 01:06:49 PM IST

நாகர்கோவில், ஜூன் 18: பறக்கையிலுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 23-ம் தேதி லாபகரமான முயல் வளர்ப்பு முறைகள் குறித்த இலவச பயிற்சி நடைபெறவுள்ளது. இது தொடர்பாக இம்மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் இரா. ராம்பிரபு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இப்பயிற்சியின்போது பண்ணை அமைவிடம், வீட்டமைப்பு இனங்களைத் தேர்வு செய்தல், வளர்ப்பு முறைகள், தீவன முறைகள், தீவனம் தயாரித்தல், இனப்பெருக்க முறைகள், நோய்களும் தடுப்புமுறைகளும் மற்றும் பண்ணை பொருளாதாரம் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து முகாமில் விளக்கப்படுகிறது.

இந்த பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் மற்றும் சுயவேலைவாய்ப்பில் ஆர்வமுள்ள இளைஞர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நேரிலோ அல்லது 286843 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து பயிற்சியில் சேரலாம் என்றார் ராம்பிரபு.

**ஏக்கருக்கு 73 டன் கரும்பு மகசூல்**

First Published : 19 Jun 2011 11:30:36 AM IST

செஞ்சி, ஜூன் 18: செஞ்சி வட்டம், செம்மேட்டில் அமைந்துள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட, செஞ்சி கோட்டம், கோணை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜனார்த்தனன் சொட்டு நீர்ப் பாசன முறையில் 3.10 ஏக்கரில் அகலபாரில் கரும்பு பயிர் செய்து ஏக்கருக்கு 73 டன் மகசூல் எடுத்து சாதனை புரிந்துள்ளார்.

÷அதாவது 3.10 ஏக்கரில் மொத்தம் 228 டன் மகசூல் எடுத்துள்ளார். அந்த விவசாயி கூறியது:

÷நான் முதலில் அகலபாரில் சொட்டு நீர் அமைத்து கரும்பு பயிர் செய்ய தயக்கத்துடன் இருந்தேன். ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையைச் சேர்ந்த கரும்பு அதிகாரி ஆர்.பிரபாகரன் மற்றும் களப்பணியாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் ஆகியோரின் ஊக்கத்தின் பேரில் சொட்டு நீர் அமைத்து அகல பாரில் (ஐந்தரை அடி) இடைவெளியில் இரு வரிகளில் கரும்பு பயிர் இட சம்மதித்தேன்.

÷ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையரின் பரிந்துரை பேரில் கோணை விவசாய கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று ஜெயின் இரிகேஷனில் 3.10 ஏக்கரில் சொட்டு நீர்ப் பாசனம் அமைத்து கொடுத்தார்கள்.
÷தரமான விதை கரும்பை ஆலையின் மூலம் கீழ்பென்னாத்தூரில் இருந்து பெற்று ஐந்தரை அடி அகலபாரில் இருவரிகளில் வரிக்கு வரி அரை அடி இடைவெளியில் கரும்பு நடவு செய்தேன்.
÷நடவு செய்யப்பட்ட 3-ம் நாளில் களைக்கொல்லி தெளித்தேன். ஆலையினர் கூறியபடி தேவையான நேரத்தில் தேவையான உரம் மற்றும் பயிர் நிர்வாகம் செய்தேன்.
÷நீரில் கரையக் கூடிய உரங்களை அட்டவணைப்படி கரும்பு பயிருக்கு சொட்டி நீர் வாயிலாக கொடுத்தேன்.
÷மேலும் அகல பாரில் கரும்பு பயிர் இடுவதால் மகசூல் குறைந்துவிடும் என்னும் ஐயப்பாடு, ஏக்கருக்கு 73 டன்கள் மகசூல் பெற்றதால் நீங்கியது என்றார் விவசாயி ஜனார்த்தனன்.
÷அகலபாரில் பயிரிடப்படும் கரும்பில் இயந்திரத்தை உபயோகித்து களை நிர்வாகம் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரத்தை உபயோகித்து, கரும்பு அறுவடை செய்ய ஏதுவாக இருக்கும் என்றும் கூறினார்.

தினமலர்

**மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,00:24 IST

விழுப்புரம் : திருக்கோவிலூர் வட்டம் சிவனார்தாங்கல் கிராமத்தில் மண் பரிசோதனை, பாசன நீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். மண் மற்றும் பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவம், மண் மற்றும் பாசன நீர் மாதிரிகள் எடுக்கும் முறைகள் குறித்து வேளாண்மை அலுவலர்கள் கங்கா கவுரி, ஆனந்தி விளக்கினர். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் கம்பு சாகுபடி மற்றும் மானியம் குறித்து துணை வேளாண்மை அலுவலர் ராமமூர்த்தி விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் சிவநேசன், குமார் கலந்து கொண்டனர்.

**20 லட்சம் மூட்டை மஞ்சள் இருப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2011,01:31 IST

கோபிசெட்டிபாளையம்: மஞ்சள் விலையில் மாற்றம் எதுவுமில்லாமல் விலை குறைந்து வரும் நிலையில் பெரும்பாலான விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்துள்ளனர். 20 லட்சம் மூட்டை மஞ்சள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மஞ்சள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் ஈரோடு மஞ்சளுக்கு தேசிய அளவில் மார்க்கெட்டில் தனி மவுசு உண்டு. பல்வேறு பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மஞ்சள் ஈரோட்டில் உள்ள அரசு ஒழுங்கு முறை விற்பனை கூடம், தனியார் மஞ்சள் மண்டிகளுக்கு கொண்டு வரப்படுகிறது. உள்ளூர் வெளி மாநில வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்து செல்கின்றனர். டிசம்பர் முதல் மார்ச் வரை மஞ்சள் சீஸன் காலமாகும். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மஞ்சள் ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. கடந்தாண்டு குவிண்டால் அதிகபட்சமாக 17 ஆயிரம் ரூபாயை தொட்டது. அதன் பின் மஞ்சள் விலை தொடர்ந்து படிப்படியாக விலை சரிவு கண்டதால் விவசாயிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். ஈரோட்டில் உள்ள கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு 141 மூட்டை மஞ்சள் வரத்தாகியது. விரலி குவிண்டால் அதிகபட்சமாக 8,199 ரூபாய், கிழங்கு 6,569 ரூபாய்க்கு விற்றது. சென்ற மூன்று மாதத்தில் மஞ்சள் விலை படிப்படியாக குறைந்ததால் விவசாயிகள் இருப்பு வைக்க துவங்கி உள்ளனர். ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும் தனியார் மண்டிகள், தோட்டங்களில் 20 லட்சம் மூட்டைகள் வரை இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

**கரும்புக்கு ரூ.2,500 வழங்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,01:11 IST

ஈரோடு: நடப்பு 2011-12ம் ஆண்டுக்கு, வெட்டுக்கூலி போக கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய, தமிழக விவசாயிகள் சங்கம் கோரியது. ஈரோட்டில் நேற்று தமிழக விவசாயிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். ஜூலை 5ம் தேதி உழவர் தின பேரணி நடத்த முடிவு செய்யப்பட்டது. வெட்டுக்கூலி போக கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாயாக அரசு அறிவிக்க வேண்டும். நடப்பாண்டு மத்திய அரசு முதல்ரக நெல் 1,100 ரூபாய், இரண்டாம் ரக நெல்லுக்கு 1,050 ரூபாய் விலை இருப்பதை, 2,000 ஆயிரம் ரூபாயாக தர வேண்டும். பால் விலை லிட்டருக்கு 30 ரூபாயாக அறிவிக்க வேண்டும். நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை முழுமையாக விவசாயப் பணிகளுக்கு திருப்பிவிட வேண்டும். கீழ்பவானி காலவாய் கான்கிரிட் திட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திருப்பூர் மாவட்ட விவசாயிகள் சங்க அமைப்பாளர் சின்னசாமி, நாமக்கல் மாவட்டம் தங்கவேல், தர்மபுரி மாவட்டச் செயலாளர் செல்வம், ஈரோடு மாவட்டம் ராஜூ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**முட்டை விலை 20 நாளில் 33 காசு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,01:13 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 268 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 20 நாளில் முட்டை விலை, 33 காசு ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 264 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 4 காசுகள் உயர்த்தி, 268 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த, 2ம் தேதி முட்டை விலை, 231 காசுகளிலிருந்து, 8 காசுகள் ஏற்றம் கண்டு, 239 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்பின், 4ம் தேதி, 244 காசாகவும், 6ம் தேதி, 251 காசாகவும், 9ம் தேதி, 254 காசாகவும், 13ம் தேதி, 257 காசாகவும், 17ம் தேதி, 264 காசாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. அதையடுத்து நேற்று, 268 காசுகள் என, கடந்த, 20 நாட்களில் முட்டை விலை, 33 காசுகள் ஏற்றம் கண்டுள்ளது. மழை சீஸன் காரணமாக முட்டை நுகர்வு பரவலாக அதிகரித்திருப்பது, முட்டை விலையேற்றத்துக்கு காரணம் என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம்:

ஹைதராபாத், 243 காசுகள், விஜயவாடா, தனுகு, 241 காசுகள், சென்னை, 270 காசுகள், மைசூரு, 262 காசுகள், பெங்களூரு, 265 காசுகள், மும்பை, 271 காசுகள், டில்லி, 250 காசுகள், பர்வாலா, 236 காசுகள், கோல்கத்தா, 291 காசுகள். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 46 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,01:18 IST

நாமக்கல்: "நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், வரும் 24ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், இம்மாதம் 24ம் தேதி, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது. மாவட்ட கலெக்டர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில், விவசாயிகள், விவசாயம் தொடர்பான குறைகளை நேரில் தெரிவித்தும், மனுக்களாக அளித்தும் பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிலக்கடலை பயிர் சாகுபடி: வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,23:37 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், எண்ணெய் வித்து பயிர்களான நிலக்கடலை சாகுபடி குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், வெப்ப சலனத்தின் காரணமாக, நல்ல மழை பெய்துள்ளது. இதை பயன்படுத்தி விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த பருவத்தில், டி.எம்.வி., 7, வி.ஆர்.ஐ.,2 மற்றும் வி.ஆர்.ஐ.,3 ஆகிய ரகங்களை சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு, 80 கிலோ விதை தேவை. சதுர மீட்டருக்கு, 33 செடிகள் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும். அதிக மகசூல் பெற அடியுரமாக மக்கிய குப்பையுடன் ஜிப்சம், நுண்ணூட்ட சத்து ஆகியவை கலந்து இட வேண்டும். விழுது இறங்கும் சமயத்தில் ஜிப்சம் 80 கிலோ இட்டு நன்கு மண் அணைக்க வேண்டும். அழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய்கள் வராமல் தடுக்க, புளித்த மோருடன் ட்ரைகோமோ விரிடி கலந்து ஊற வைத்து பின் வடி கட்டி மாலை வேளையில் செடிகளில் நன்கு நனையும்படி தெளிக்கலாம். நல்ல திரட்சியான அதிக எடை தரக்கூடிய காய்கள் பெற, மேலுரம் இடம் போது யூரியாவை குறைத்து, பெட்டாசு உரத்தை அதிகம் சேர்த்து குப்பைகளுடன் கலந்து இட வேண்டும். உற்பத்தியை அதிகாரிக்க, மானிய விலையில் நுண்ணூட்ட சத்து விநியோகம் செய்யப்படுகிறது. நீரை சிக்கனமாக பயன்படுத்த பைப் லைன் மற்றும் தெளிப்பு நீர் பாசனம், பயிர் பாதுகாப்பு கருவிகள், சான்று பெற்ற விதைகளும் உற்பத்தி மானியம், 10 ரூபாய் கிலோவுக்கு மாநில மற்றும் மத்திய அரசு வழங்குகிறது. நடப்பாண்டில் தர்மபுரி மமாவட்டத்தில் நிலக்கடலை, சூரிய காந்தி, எள் மற்றும் ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்து பயிர்களில், 187 ஹெக்டேர் விதைப்பண்ணை அமைத்து, 151 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் செய்ய திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இதுவரை, 41 மெட்ரிக் டன் கொள்முதல் செய்து தரமான விதை வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,23:40 IST

தர்மபுரி: பென்னாகரம் பட்டு வளர்ச்சி துறை மற்றும் பாலக்கோடு தொழில் நுட்ப சேவை மையம் சார்பில், பாலக்கோடு அடுத்த சூடப்பட்டியில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது. பென்னாகரம் பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் தனபால் தலைமை வகித்தார். பாலக்கோடு உதவி ஆய்வாளர் சிவசங்கர் வரவேற்றார். மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி சமுத்திர வேல், மல்பரி தோட்ட பராமரிப்பு, உயிர் உரம் இடுதல், மாவு பூச்சியை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் முறை மற்றும் பைவோல்டைன் புதிய வீரிய ரகம் பற்றியும், ஊசி ஈ, துக்ராநோய் தாக்குதல் பற்றியும், ஒட்டுண்ணி பயன்படுத்தி கட்டுப்படுத்தல் முறை குறித்தும் விரிவாக விளக்கினார். மல்பரிக்கு சொட்டு நீர் பாசனம், ஆட்குறைப்பு குறித்து வேளாண் உதவி இயக்குனர் இளையராஜா விளக்கினார். விவசாயிகளுடன் குழு விவாதம் நடந்தது. குழு அறிக்கை சமர்பிக்கப்பட்டது. மாரண்டஹள்ளி, பாலக்கோடு உதவி ஆய்வாளர்கள், சூடப்பட்டி பகுதி விவசாயிகள் திரளாக பங்கேற்றனர். கொலசனஅள்ளி சார் சரக இள நிலை ஆய்வாளர் வாசுதேவன் நன்றி கூறினார். * பென்னாகரம் தாலுகா சின்னகடைமடை கிராமத்தில் பட்டு வளர்ச்சி துறை சார்பில் கிரியா ஊக்கி திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு முகாம் நடந்தது. பென்னாகரம் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் தனபால் தலைமை வகித்தார். ஓசூர் மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி சமுத்திரவேல், மல்பரி தோட்ட பராமரிப்பு மற்றும் இளம்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். வேளாண் துறை உதவி இயக்குனர் சசிகுமார், மல்பரி தோட்டத்தில் சொட்டு நீர் பாசன முக்கியத்துவம் குறித்து விளக்கினார். பென்னாகரம் தொழில் நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் முத்தமிழ்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர். சின்னகடைமடை பகுதியை சேர்ந்த விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

## முளைப்பு திறனுள்ள விதைகளை தேர்வு செய்ய தடுமாறும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

பல்லடம் : பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. மக்காச்சோளம், தக்காளி, வெண்டை, கத்தரி, பீர்க்கை, பாகல், மிளகாய், வெங்காயம், பெல்லாரி போன்றவை பயிரிட்டு அறுவடை செய்யப்படுகின்றன. மிகவும் அனுபவம் வாய்ந்த விவசாயிகளை தவிர பிற விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் காய்கறி பயிர்கள், மக்காச்சோளம் மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விதைகளை வாங்கும்போது, தரமான, நல்ல முளைப்பு திறன் கொண்டவையா அல்லது முளைப்பு திறன் குறைவான விதையா என்பதை கண்டறிந்து வாங்க

தெரியாமல் தடுமாறுகின்றனர்.பல விவசாயிகள், தரம் குறைந்த விதைகளை வாங்கி, சாகுபடி செய்கின்றனர்; போதிய மகசூல் கிடைக்காமல் நஷ்டம் அடைகின்றனர். விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுப்பதாக அறிவித்துள்ள அரசு, கிராமப்புற விவசாயிகள் பயன்படும் வகையில் மூன்று ஊராட்சிக்கு ஒரு விழிப்புணர்வு கூட்டம் என்ற அளவில் கூட்டம் நடத்த வேண்டும். அதில், தரமான விதைகளை எவ்வாறு கண்டறிந்து வாங்க வேண்டும் என விவசாயிகளுக்கு, விதை ஆய்வாளர்கள் மற்றும் அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் இணை இயக்குனர் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

திருப்பூர் : ""அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையில் 20 முதல் 30 சதவீத அளவுக்கு கூடுதல் மகசூல் பெறலாம்," என வேளாண் துறை இணை இயக்குனர் முத்துச்சாமி தெரிவித்துள்ளார்.தமிழக அரசு உத்தரவுப்படி, அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்காக, நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலமாக, உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டார பகுதிகளில், 3,000 எக்டர் அளவுக்கு நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயனடைவர். வேளாண் துறை சிபாரிசுப்படி, திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக விளைச்சல் பெறலாம் என கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: பழைய ஆயக்கட்டு பாசன விவசாயத்திற்காக, அமராவதி அணை திறக்கப்பட்டுள்ளது. பழைய முறையில் சாகுபடி செய்வதை தவிர்த்து, அமராவதி பாசன விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி செய்தால், 20 முதல் 30 சதவீத அளவுக்கு கூடுதல் மகசூல் பெறலாம். திருந்திய நெல் சாகுபடிக்கு தேவையான உரம், தனியார் மற்றும் கூட்டுறவு மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சாகுபடிக்கு தேவையான விதை நெல் (ஏ.டி.டி., 43), மடத்துக்குளம், குமரமங்கலம், உடுமலை வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நுண்ணுயிர் உரங்களும், நுண்ணூட்டச்சத்துக் களும், மானிய விலையில் வழங்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடிக்காக, விவசாயிகள், வேளாண் தொழில்நுட்ப களப்பணியாளர்களிடம் தேவையான ஆலோசனை பெற்று பயனடையலாம், என்றார்.

**விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

மடத்துக்குளம் : மடத்துக்குளம் வேளாண்மை அலுவலகத்தில் குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான விதைநெல் மற்றும் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மடத்துக்குளம் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வரும்நிலையில், பழைய ஆயக்கட்டு பகுதி பாசனத்துக்காக அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மடத்துக்குளம் வேளாண் துறை உதவி இயக்குனர் பொன்முடி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மடத்துக்குளம் பகுதியில் குறுவை பருவ சாகு படிக்கான விதை நெல் (ஏடிடி -43 ), உயிர் உரங்கள் தேவையான அளவு மடத்துக்குளம் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதை நெல்லிற்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.ஐந்து மானியம் வழங்கப்படுகிறது' என கூறியுள்ளார்.

**நெல் கொள்முதல் மையம் தொழில்துறை அமைச்சர் உறுதி**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

உடுமலை : ""உடுமலை அருகே கல்லாபுரத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தால், நெல்கொள்முதல் மையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு தெரிவித்தார். உடுமலை அருகே அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடந்தது. இதில், பங்கேற்ற தொழில் துறை அமைச்சர் சண்முகவேலு பேசுகையில், ""விவசாயிகள் முறையாக நேரத்தில் நாற்று விட்டு, சாகுபடி பணிகளை மேற்கொள்ள வேண்டும். தரமான விதைகளை வேளாண்துறை மூலமாக பெற்று சாகுபடி பணிகளில் ஈடுபட வேண்டும். கணியூர், வேடப்பட்டி, தாராபுரம் பகுதிகளில் நெல்கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. கல்லாபுரத்தில் நெல்கொள்முதல் மையம் வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தால், வரும் ஆண்டே அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

**விதிமீறும் விதை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

உடுமலை : விதை விற்பனை சட்ட விதிகளை மீறி விதை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் எச்சரித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலை, மடத்துக்குளம்

பகுதிகளில் இயங்கி வரும் விதை விற்பனை மையங்களில் விதை ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்பு குழுவினர் ஆய்வு நடத்தினர். விதை விற்பனை நிலையங்களில் பராமரிக்கப்பட வேண்டிய விதை இருப்பு பதிவேடு, கொள்முதல் பட்டியல், விதை இருப்பு, விதை காலாவதி நாள், விதை குவியல் எண், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனைப்பட்டியல் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன. விற்பனை பட்டியலை முழுமையாக பராமரிக்காத விதை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை அளிக்கப்பட்டது. விதை முனைப்பு பரிசோதனை செய்ய தேவையான சாதனங்களை பயன்படுத்தி விதைகளின் முளைப்பு திறனை கண்டறிந்து விதைகளை விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டது. விதை விற்பனை நிலையங்களில் காலாவதியான விதைகளை விற்பனை செய்த இரு விற்பனை நிலையங்கள் மீது வழக்கு தொடரப்பட்டு கோர்ட் தண்டனை வழங்கியுள்ளது. எனவே விதை விற்பனை சட்ட விதிகளை மீறும் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு நஷ்டஈடு**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,21:36 IST

உடுமலை : உடுமலை, அமராவதி வனச்சரகங்களிலிருந்து குடிநீருக்காக வெளியேறும் யானை கூட்டம் வழித்தடம் மாறி விளைநிலங்களுக்குள் சென்று தென்னை மற்றும் மா மரங்களை சேதப்படுத்துகின்றன. கொங்குரார் குட்டை, தேக்கல் கரடு போன்ற பகுதிகளில், யானைகள் மாந்தோப்பிற்குள் புகுந்து மாம்பழங்களையும், மாமரங்களையும் சேதப்படுத்தின. இதனால், விவசாயிகள் கவலை அடைந்தனர். சேதப்படுத்தப்பட்ட மரங்களுக்கு வனத்துறை சார்பில் அமராவதிநகரில் நேற்று நிவாரணத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு, விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கினார். மொத்தம் 36 விவசாயிகளுக்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் மதிவாணன், வருவாய் கோட்டாட்சியர் ஜெயமணி, தாசில்தார் நல்லசாமி, திருப்பூர் மாவட்ட வன அலுவலர் ராஜ்குமார், உடுமலை வனச்சரகர் சரவணன், அமராவதி வனச்சரகர் விஜயகுமார், அதிகாரிகள் பங்கேற்றனர்.

**குறுவை சாகுபடிக்கு வட்டியில்லா கடன்: முதல்வருக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 19,2011,23:46 IST

திருத்துறைப்பண்டி: "குறுவை சாகுபடிக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்' என, தமிழக முதல்வருக்கு நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கோரிக்கை விடுத்துள்ளார். முதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை

மனுவில் கூறியிருப்பதாவது: தமிழக வரலாற்றில் மேட்டூர் அணை "டெல்டா' சாகுபடிக்காக ஜுன் ஆறாம் தேதி திறக்கப்பட்டது, விவசாயிகள் மத்தியில் குறுவை சாகுபடிக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. குறுவை சாகுபடிக்கு தண்ணீரும் வந்து விட்டது. குறுவை சாகுபடிக்கு தண்ணீர் வந்து விடும் என்ற நிலையில் குளம், குட்டையில் உள்ள தண்ணீரை இறைத்து திருவாரூர், நாகை மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்கு ஏற்ற ரகங்களான டிகே -9, ஆடுதுறை 36, ஆடுதுறை 46, ஆடுதுறை 43 மற்றும் பாரரிய நெல் ரகங்ளான பூங்காற்று, கருங்குறுவை போன்ற ரக விதை நெல் தெளித்து பறித்து நடவு செய்ய தயாராக விவசாயிகள் உள்ளனர். வழக்கம் போல் விவசாயிகள், விவசாயப் பணிகளுக்கு கடன் எங்கு வாங்குவது? என்று கந்து வட்டிகாரர்களை நாடும் நிலையில் உள்ளனர். உழவர்கள் வரவுக்கும், செலவுக்கும் கட்டுப்படியாகாத நிலையில், இயற்கை சீற்றத்திலிருந்து இந்த ஆண்டு பயிரை பாதுகாக்க குறுவை சாகுபடிக்கு தீவிரம் காட்டி வருகின்றனர். கூட்டுறவு சங்கங்களின் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் வட்டியில்லா விவசாய கடன் அரசு நிர்ணயித்துள்ள ஏக்கருக்கு ரூபாய் 13 ஆயிரம் உடனடியாக வழங்க வேண்டும். மேலும், குறுவை சாகுபடிக்கு முறை வைக்காமல் உழவர்களின் தேவையை அறிந்து தட்டுப்பாடின்றி தண்ணீர் விட வேண்டும்.

**வரைஆடு கணக்கெடுப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜுன் 19,2011,22:24 IST

ராஜபாளையம் : ராஜபாளையம் வனப்பகுதியில் வரைஆடுகள் கணக்கெடுக்கும் பணி குறித்து விளக்க கூட்டம் நடந்தது. சாத்தூர் முதல் சேத்தூர் வரை வனபகுதிகளில் வரைஆடு கணக்கெடுக்கும் பணி தொடர்பாக ராஜபாளையத்தில் விளக்க கூட்டம் நடந்தது. வனஉயிரின பாதுகாப்பு சங்க செயலாளர் சுப்பிரமணிய ராஜா வரவேற்றார். தலைவர் ராமசந்திரராஜா, ஸ்ரீவில்லிபுத்தூர் வனகாப்பாளர் ராஜு, களக்காடு புலிகள் சரணாலய துணைஇயக்குனர் வெங்கடேசன் பேசினர். மண்டல இயக்குனர் சேகர் குமார் நிராஜ் பேசுகையில், ""இதுஒரு சவாலான பணி. வரைஆடுகளின் பழக்கழக்கங்கள், மற்ற விலங்குகளுடன் பழகுவதையும் சேகரிக்கவேண்டும். வனப்பகுதியில் பார்க்கும் விலங்குகளை, இடம், நேரத்துடன் குறிக்கவேண்டும்'' என்றார். உலக வனநிதிய விலங்கியல் ஆராய்ச்சியாளர் பிரடிட் பேசுகையில், ""வரைஆடுகளில் நீலகிரி, ஹிமாலயா, அரேபியா என வகை உள்ளன. கணக்கெடுக்கும்போது, பாதுகாப்பு முக்கியம். புல்வெளி, பாறைகள், மலை சரிவுகளில் இவ்வகை ஆடுகள் இருக்கும். கொம்பு, நிறம், முதுகு அமைப்பு வைத்து வயதை கணக்கிட்டு, படம் எடுக்கவேண்டும். கணக்கெடுப்பின் மூலம் ஒரு இனம் அழிவதை, தடுக்க முடியும்'' என்றார்.

## *நடப்பு 2010–11 பருவத்தில் நாட்டின் காபி உற்பத்தி 10 சதவீதம் சரிவடையும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*இந்தியாவில், நடப்பு 2010–11 பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) காபி உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 10 சதவீதம் சரிவடைந்து 2.99 லட்சம் டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*நம் நாட்டில் அராபிகா, ரோபஸ்டா என்ற இரண்டு வகை காபி உற்பத்தி செய்யப்படுகிறது. நடப்பு பருவத்தில் அராபிகா உற்பத்தி 90,000 டன்னாகவும், ரோபஸ்டா உற்பத்தி 1.80–2.09 லட்சம் டன்னாகவும் இருக்கும் என காபி வாரியம் தெரிவித்துள்ளது. காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது.*
*காபி உற்பத்தி சரிவடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், காபி ஏற்றுமதியும் குறையும் நிலை உருவாகியுள்ளது. 2011–ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் ஏற்றுமதி 10 சதவீதம் குறையும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*
*இந்தியாவில் உற்பத்தியாகும் காபியில் 80 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 3.25 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டை விட 60 சதவீதம் அதிகமாகும்.*
*நம் நாட்டிலிருந்து இத்தாலி அதிக அளவில் காபி இறக்குமதி செய்கிறது. நாட்டின்*

மொத்த காபி ஏற்றுமதியில் அந்நாட்டின் பங்களிப்பு 24 சதவீதமாக உள்ளது. அடுத்தபடியாக ஜெர்மனியின் பங்களிப்பு 14 சதவீதமாகவும், பெல்ஜியத்தின் பங்களிப்பு 10 சதவீதமாகவும் உள்ளது.

## முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் அமைச்சர் சி.சண்முகவேலு திறந்து விட்டார்



அமராவதி அணையின் அழகிய தோற்றத்தை படத்தில் காணலாம்.

உடுமலை, ஜூன்.20–

அமராவதி அணையில் இருந்து அமைச்சர் சி.சண்முகவேலு நேற்று பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டார்.

முதல்–அமைச்சர் உத்தரவு

உடுமலையை அடுத்த அமராவதி அணையில் இருந்து அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விடும்படி முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விடும்படி முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

தண்ணீர் திறப்பு

அதன்படி அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நேற்று காலை அமராவதி அணையில் நடந்தது. தொழில்துறை அமைச்சர் சி.சண்முகவேலு, பொத்தனை அழுத்தி தண்ணீரை திறந்து விட்டார். பின்னர் அணையில் இருந்து சீறி பாய்ந்து வந்த தண்ணீரில் மலர்களை தூவினார்.

அமராவதி அணையின் நீர்மட்டம் 90 அடி. மொத்த தண்ணீர் கொள்ளளவு 4 ஆயிரத்து 47 மில்லியன் கன அடி. அணையில் நேற்று காலையில் நீர்மட்டம் 51

அடியாக இருந்தது. 1,224 மில்லியன் கனஅடி தண்ணீர் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,839 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 412 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு இருந்தது.
பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதைத்தொடர்ந்து, காலை 9 மணி முதல் அமராவதி ஆற்றில் குமரலிங்கம், கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய 6 வாய்க்கால்கள் மூலம் வினாடிக்கு 250 கன அடி வீதமும், கல்லாபுரம் மற்றும் ராமகுளம் வாய்க்கால் மூலம் தலா 25 கன அடி வீதமும் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.
இத்துடன் அமராவதி ஆற்றில் கடந்த 3 நாட்களாக குடிநீருக்காக வினாடிக்கு 400 கனஅடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீரும் வெளியேறிக்கொண்டு இருந்தது.
குடிநீருக்காக திறந்து விடப்பட்டுள்ள 400 கன அடி தண்ணீர் வருகிற 21–ந் தேதி நிறுத்தப்படும்.

7,520 ஏக்கர் பாசனம்

நேற்று திறந்து விடப்பட்ட தண்ணீர், அமராவதி ஆற்றில் இருந்து 8 வாய்க்கால்கள் மூலம் வினாடிக்கு 300 கன அடி வீதம் வருகிற அக்டோபர் மாதம் 31–ந் தேதி வரை 123 நாட்கள் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு விடப்படும். இதன் மூலம் உடுமலை தாலுகாவில் 1,450 ஏக்கர் நிலமும், மடத்துக்குளம் தாலுகாவில் 6 ஆயிரத்து 70 ஏக்கர் நிலமும் (மொத்தம் 7,520 ஏக்கர்) பசான வசதி பெறும்.
தண்ணீரை திறந்து விட்டு, விவசாயிகள் மத்தியில் அமைச்சர் சி.சண்முகவேலு பேசும் போது கூறியதாவது:–
முதல்–அமைச்சரின் உத்தரவுப்படி அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. அணைக்கு நீர்வரத்து உள்ளதால் விவசாயிகளின் நலன் கருதி 8 வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்தி காலத்தில் நாற்றுக்களை நட்டு பயன் பெற வேண்டும்.

நெல் கொள்முதல் மையம்

நல்ல நெல் விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். விவசாயிகளின் நலன் கருதி வேடபட்டியில் நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டு உள்ளது.
தாராபுரத்தில் 2 நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.
தேவைப்பட்டால் கல்லாபுரத்திலும் நெல் கொள்முதல் மையம் திறக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகளின் நலனுக்காக இந்த அரசு செயல்பட்டு வருகிறது.
கல்லாபுரம் மற்றும் 6 பழைய வாய்க்கால்களில் மராமத்து பணிகளை செய்ய நிதி உள்ளது. அதற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வாய்க்கால்களில் மராமத்து பணிகளை செய்யும் போது பொதுப்பணித்துறையினர் அந்தந்த பகுதி வாய்க்கால் பாசன சங்க நிர்வாகிகளை நேரில் அழைத்து சென்று வாய்க்கால்களை பார்த்து, கலந்து பேசி பணிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த பணிகளை பாசன சங்கத்தினரே பொறுப்பு எடுத்து செய்ய வேண்டும். வாய்க்கால் கரைகளை சுத்தம் செய்ய வேண்டும்.
கரும்புக்கு சிறப்புத் தண்ணீர் வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கேட்டுள்ளீர்கள், அணைக்கு தண்ணீர் வரத்து அதிகமானதும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.
இவ்வாறு அமைச்சர் சி.சண்முகவேலு கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

நிகழ்ச்சிக்கு திருப்பூர் மாவட்ட கலெக்டர் எம்.மதிவாணன், தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் எஸ்.மோகனசுந்தரம், உதவி செயற்பொறியாளர் எஸ்.ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உதவி பொறியாளர் டி.ஞானவேல், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்க தலைவர் எஸ்.ஆர்.வேலுச்சாமி, உடுமலை ஆர்.டி.ஓ.என்.ஜெயமணி, தாசில்தார் சி.நல்லசாமி, மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் வி.பொன்முடி, அ.தி.மு.க. உடுமலை ஒன்றிய செயலாளர் எஸ்.கே.எஸ்.கந்தசாமி, மடத்துக்குளம் தொகுதி கழக செயலாளர் வக்கீல் கே.மனோகரன், நகர கழக செயலாளர் கே.ஜி.சண்முகம் மற்றும் பழைய ஆயக்கட்டு பாசன பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கூடலூரில் பருவமழை தீவிரம்: களை கட்டும் இஞ்சி விவசாயம்



கூடலூர் பகுதியில் ஒரு விவசாயி தோட்டத்தில் இஞ்சி பயிரிடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், ஜூன்.20–

கூடலூரில் பருவ மழை தீவிரம் அடைந்து உள்ள தால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் இஞ்சி விவசா யம் பயிரிடும் பணி களை கட்ட தொடங்கி உள்ளது.

கோடை காலம் முடிவு

ஏப்ரல், மே மாதங்கள் கோடை காலமாகும். இத னால் தமிழகம் முழுவதும் வறட்சியான காலநிலை நில வும். கூடலூர் பகுதியில்நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து குறைந்து காணப்படும். இத னால் விவசாயத்துக்கு தேவை யான நீர் இல்லாமல் கோடை காலத்துக்கு ஏற்ற பயிர்களை விவசாயிகள் பயரிடுவதில் கவனம் செலுத்தி

வந்தனர்.
இந்த கால கட்டத்தில் பாகற்காய், புடலங்காய், பஜ்ஜி மிளகாய் உள்ளிட்ட காய்கறி களை பயிரிட்டு மகசூலை பெற்று வந்தனர். இதனிடையே ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கி விடு வது வாடிக்கை. இதனால் கோடை காலத்துக்கு பிறகு மழைக்கால பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கி விடுவர். தற்போது கோடை காலம் முடிந்து தென்மேற்கு பருவமழை கூடலூர் பகுதியில் தீவிரம் அடைந்துள்ளது.
இஞ்சி விவசாயம் களை கட்டுகிறது
இதனால் பணப்பயிரான இஞ்சி பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர். நீலகிரி மாவட்டத்திலேயே அதிக அளவாக கூடலூர் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இஞ்சி பயிரிடப் பட்டுள்ளன. கூடலூர், ஸ்ரீமதுரை, மசினகுடி, தேவர் சோலை, தொரப்பள்ளி, பாடந்தொரை, ஓவேலி பகுதிகளில் இஞ்சி விவசாயம் களை கட்டி உள்ளது.
அதற்கேற்றாற் போல் மழையும் நன்றாக பெய்து வருவதால் இஞ்சி விவசாயம் அதிகரிக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியோடு தெரிவித்தனர். இதே போல் குறுமிளகு விளைச்சலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக குறுமிளகு விவசாயிகள் கருத்து தெரி வித்துள்ளனர்.

## தேயிலை செடிகளை கவாத்து செய்வதால் இலையின் தரம் கெடாமல் பாதுகாக்க முடியும்

குன்னூர், ஜூன்.20–
குறிப்பிட்ட கால இடைவெளியில் தேயிலை செடிகளை கவாத்து செய் வதன் மூலம் இலையின் தரம் கெடாமல் பாதுகாக்க முடியும் என்று உபாசி விஞ்ஞானி ராமமூர்த்தி கூறியுள்ளார்.
விலை வீழ்ச்சி
நீலகிரி தேயிலை தூளின் விலை வீழ்ச்சிக்கு தரமற்ற தேயிலை தூள் உற்பத்தி தான் காரணம் என்று கண்டுபிடிக் கப்பட்டது. இதனை தொடர் ந்து தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவி யல் மையமும் இணைந்து தேயிலை தர மேம்பாட்டு திட்டத்தை தொடங்கின.இதன் பலனாக தரமான தேயிலை தூள் உற்பத்தி செய் யப்பட்டு வருகிறது. மேலும் விவசாய சங்கங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. கோத்தகிரி அருகே உள்ள ஆடதொரையில் 5 விவசாய சங்கங்களின் தொடக்க விழா நடைபெற்றது. தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் விழாவில் கலந்து கொண்டு விவசாய சங்கங்களுக்கான சான்றிதழ்களை வழங்கி னார். விழாவில் கலந்து கொண்ட உபாசி வேளாண்மை அறிவியல் மைய தேயிலை தர மேம்பாட்டு திட்ட விஞ்ஞானி ராமமூர்த்தி பேசியதாவது:–
அதிக விலை
தேயிலை செடிகளை சரியான பருவத்தில் குறிப் பிட்ட இடைவெளியில் கவாத்து செய்வது மிகவும் இன்றியமையாதது ஆகும். கவாத்து செய்வதால் தரமான பச்சை தேயிலை, அதிக விலை ஆகியவை கிடைக்க வாய்ப்பு உள்ளது.
துரித வளர்ச்சி பருவங்களில் கவாத்து செய்வதால் இலை யின் தரம் கெடாமல் பாது காக்க முடியும். கவாத்து செய்ய ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால் எந்திரத்தை

*பயன்படுத்தி அதிக பரப் பளவை குறைந்த ஆட்களில் வெட்ட முடியும். விவசாய சங்கங்கள் மூலம் சிறப்பு வகை தேயிலையான சில்வர் டிப்ஸ் தேயிலையை தயாரித்து கூடுதல் லாபம் பெற முயற்சி செய்ய வேண்டும்.*
*இவ்வாறு அவர் பேசினார்.*

தினகரன்

**4 மாநிலம் ஒருங்கிணைந்து மஞ்சள் விலையை நிர்ணயிக்க விவசாயிகள் குழு உருவாகிறது**

பதிவு செய்த நாள் 6/19/2011 1:43:52 AM



பள்ளிபாளையம்: மஞ்சள் விலையை நிர்ணயிக்க விவசாயிகள் குழு உருவாக்கப்படுகிறது.
பல்வேறு சிறப்புமிக்க மஞ்சளை தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். உலகளவில் மொத்த மஞ்சள் உற்பத்தியில் 78 சதவீதம் இந்தியாவில் விளைகிறது.
இந்தியாவில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு அவர்களால் விலை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. புரோக்கர்கள், மொத்த வியாபாரிகள்தான் விலை நிர்ணயம் செய்கின்றனர். உற்பத்தி அதிகம் இருக்கும்போது கொள்முதல் விலையை மிகக்குறைவான அளவில் நிர்ணயம் செய்து, பின்னர் அதிக விலைக்கு விற்பனை செய்து பெருமளவில் லாபமடைகின்றனர். இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.
இந்த பிரச்னையை தீர்க்க, தமிழகம் உட்பட 4 மாநிலங்களில் உள்ள 28 விவசாயிகள் சங்கங்களை ஒருங்கிணைத்து, இந்திய மஞ்சள் விவசாயிகள் கவுன்சில்(ஞிதிசிமி) என்ற அமைப்பை தொடங்க ஆலோசனை நடைபெற்று வருகிறது. இதில் விவசாயிகள் அமைப்பின் தலைவர்கள் சொல்லேருழவன் செல்லமுத்து, தமிழ்நாடு கள் அமைப்பு தலைவர் நல்லசாமி உள்ளிட்டோர் நிர்வாகிகளாக உள்ளனர். முட்டை விலையை நிர்ணயம் செய்யும் ழிணிசிசிஜியை போல இந்த அமைப்பு மஞ்சள் விலையை நிர்ணயம் செய்யும். நிஜாமாபாத், சாங்கிலி, ஈரோடு ஆகிய முப்பெரும் மஞ்சள் மார்க்கெட் விவசாயிகளை சந்தித்து இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த அமைப்புக்கான ஆலோசனைகளை பெற வரும் 26ம் தேதி, ஈரோட்டில் விவசாயிகள் அமைப்பு கூடுகிறது.

## தினமும் 3 கப்பலில் வரத்து பருப்பு விலை சரிந்தது

பதிவு செய்த நாள் 6/19/2011 1:42:59 AM



சென்னை: பருப்பு, எண்ணெய், சர்க்கரை விலை குறைந்துள்ளது. இன்னும் சில தினங்களில் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் பூண்டு, பருப்பு வகைகள், ஏலக்காய் போன்றவை அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு இருந்து தான் தமிழகத்துக்கு பூண்டு, பருப்பு, ஏலக்காய் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

இந்த மாநிலங்களில் பருவமழை சரியான நேரத்தில் பெய்தது. இதனால், எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இவற்றின் விலை குறையத் தொடங்கியுள்ளது.

கடந்த மாதம் நாட்டு பூண்டு 1 கிலோ ஸி 120க்கு விற்றது. இப்போது ஸி 90, 2ம் ரகம் ஸி 70, சர்க்கரை ஸி 31லிருந்து ஸி 21, வெல்லம் ஸி 40லிருந்து ஸி 34, துவரம் பருப்பு ஸி 70லிருந்து ஸி 60, 2ம் ரகம் ஸி 60லிருந்து ஸி 50 ஆக குறைந்துள்ளது.

உளுந்தம் பருப்பு ஸி 80லிருந்து ஸி 70, 2ம் ரகம் ஸி 70லிருந்து ஸி 60, பாசிப்பருப்பு ஸி 70லிருந்து ஸி 60, 2ம் ரகம் ஸி 60லிருந்து ஸி 50, கடலைப்பருப்பு ஸி 40லிருந்து ஸி 37, 2ம் ரகம் ஸி 37லிருந்து ஸி 34, ஈரோடு மஞ்சள் ஸி 150லிருந்து ஸி 100, சேலம் மஞ்சள் ஸி 180லிருந்து ஸி 140 என விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஊட்டி, கம்பம், தேனி போன்ற பகுதியில் இருந்து வரும் மலைப்பூண்டு ஸி 140ல் இருந்து ஸி 110 ஆக குறைந்துள்ளது. அதேபோல், அக்மார்க் நல்லெண்ணெய் ஸி 140லிருந்து ஸி 120, சாதா நல்லெண்ணெய் ஸி 100லிருந்து ஸி 80, தேங்காய் எண்ணெய் ஸி 140லிருந்து ஸி 120, 2ம் ரகம் ஸி 120லிருந்து ஸி 100, பாமாயில் ஸி 62லிருந்து ஸி 58, புளி ஸி 300லிருந்து ஸி 120 ஆக குறைந்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் சொரூபன் கூறுகையில்,

விளைச்சல் அதிகம் காரணமாக பருப்பு, புளி, பூண்டு, ஏலக்காய் விலை குறைந்துள்ளது. அது மட்டுமல்லாமல் கென்யா, பர்மா போன்ற நாடுகளில் இருந்து பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. அதாவது, ஒரு நாளைக்கு 2 முதல் 3 கப்பல்களில் பருப்பு வந்து கொண்டிருக்கிறது. இதனால், இன்னும் விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

**மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு ரூ400 சரிவு கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ50 உயர்வு**

பதிவு செய்த நாள் 6/19/2011 1:48:33 AM



விருதுநகர்: கடலைப்பருப்பு விலை மூட்டைக்கு ரூ100 உயர்ந்துள்ளதால், கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.50ம், கடலை புண்ணாக்கு மூட்டைக்கு ரூ200ம் அதிகரித்துள்ளது. மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு ரூ400 சரிந்துள்ளது.

கடலைப்பருப்பு புதிய வரத்து ஆவணி மாதத்திற்கு பிறகே துவங்கும் என்பதால், தற்போது விலை உயர்ந்து வருகிறது.

கடலைப்பருப்பு மூட்டை (80 கிலோ) ரூ4,450லிருந்து ரூ4,550ஆக உயர்ந்துள்ளதால், கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ1,450 லிருந்து ரூ1,500ஆகவும், கடலை புண்ணாக்கு (100 கிலோ) ரூ3,050லிருந்து

ரூ3250 எனவும் விலை உயர்ந்துள்ளது.

மிளகாய் வத்தல் வரத்து குறைந்துள்ளது. சீசன் முடியும் நிலையில் தரமற்ற வத்தல் வரத்து காரணமாக விலை குவிண்டாலுக்கு ரூ400 சரிந்துள்ளது. விருதுநகர் வத்தல் மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் 400 மூட்டை வத்தல் மட்டுமே வந்துள்ளது.

தரம் குறைந்த சம்பா வத்தல் குவிண்டால் ரூ6,500 முதல் ரூ7,100 வரையிலும், தரமான வத்தல் ரூ7,500 முதல் ரூ8,000 வரையிலும் விற்பனையாகிறது. குண்டூர் ஏசி வத்தல் குவிண்டால் ரூ8,000 முதல் ரூ9,000 வரை விற்பனையானது.

விருதுநகர் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம்: தஞ்சை உளுந்து மூடை (100 கிலோ) &ரூ4,500, பர்மா பருவட்டு&ரூ4,300, பொடி&ரூ3,800, உருட்டு உளுந்தம் பருப்பு லயன்&ரூ6,000, பர்மா பருவட்டு&ரூ5,600, பொடி& ரூ5,000, தொளி&ரூ5,000, துவரை& ரூ2,800, துவரம்பருப்பு லயன்&ரூ5,500, உடைசல்&ரூ4,700, தஞ்சை பயறு&ரூ3,500, நாடு பயறு&ரூ3,700, பாசிப்பருப்பு நாடு&ரூ5,100, தஞ்சை பருப்பு&ரூ4,900, மல்லி(40கிலோ) நாடு&ரூ2650 முதல் ரூ2,800, லயன் மல்லி&ரூ2,150 முதல் ரூ2,200 வரை, நல்லெண்ணெய்&ரூ2080, தேங்காய் எண்ணெய்&ரூ1,408, எள் புண்ணாக்கு (65கிலோ) ரூ1,310 என விற்பனையானது.

**உளுந்தூர்பேட்டை பகுதியில் சேனை கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் 6/20/2011 1:02:55 AM



உளுந்தூர்பேட்டை : விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை பகுதியில் அதிக அளவு விவசாயம் பயிர் செய்யப்படுகிறது. கரும்பு, நெல், மக்காச்சோளம், மஞ்சள் உள்ளிட்டவை அதிக அளவு பயிர் செய்து வரும் நிலையில், தற்போது உளுந்தூர்பேட்டை வட்டத்துக்கு உட்பட்ட எறையூர், பில்ராம்பட்டு, நெய்வனை, கூவாடு, வடகுரும்பூர், கூத்தனூர், தாங்கல், காட்டுஎடையார், எல்லைகிராமம் உள்ளிட்ட கிராமங்களில் தற்போது அதிக அளவு சேனை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 1,200 கிலோ, சேனை கிழங்கு பயிரிட தேவைப்படுகிறது. 8 மாத பயிரான இதற்கு ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழுஉரம் போடப்படுகிறது. 2 மூட்டை டிஏபி உரமிடப்படுகிறது. 3 மாதத்துக்கு ஒருமுறை களை எடுக்கப்படுகிறது. குறைந்த பராமரிப்பு செலவும், அதிக அளவு மகசூலும் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைக்கிறது. மதுரை, சென்னை, கோயம்புத்தூர், கோயம்பேடு, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதியில் இருந்து வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்து செல்கின்றனர். ஒரு கிலோ ரூ.10க்கு விற்பனை ஆகிறது.

எந்த காலத்திலும் சேனை கிழங்கின் விலை குறையாத நிலையில் உள்ளதால் அதிக அளவு சேனைக்கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேலும் தற்போது சேனை கிழங்கு பயிர் சொட்டு நீர் பாசன முறையிலும் பயிரிடப்படுகிறது. இதனால் குறைந்த அளவு தண்ணீரே செலவாகிறது என விவசாயிகள் கூறுகின்றனர்.

**காபி உற்பத்தி 10 சதவீதம் குறையும்**

பதிவு செய்த நாள் 6/20/2011 1:05:09 AM



புதுடெல்லி : வரும் அக்டோபரில் தொடங்கும் 2011&12 அறுவடை பருவத்தில் நாட்டின் காபி உற்பத்தி 10 சதவீதம் குறையும் என இத்துறை சார்ந்த நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். வரும் பருவத்தில் நாட்டின் மொத்த காபி உற்பத்தி, 2.99 லட்சம் டன்னாக இருக்கும் என காபி வாரியத்தின் சமீபத்திய புள்ளி விவரம் தெரிவிக்கிறது. கடந்த ஆண்டு உரிய காலத்தில் பரவலாக மழை பெய்யாததால் அராபிகா வகை காபி உற்பத்தி குறையும். இதுதவிர, பாசன நீர் மற்றும் மின்சார பற்றாக்குறை காரணமாக ரொபஸ்டா வகை காபி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என கர்நாடக மாநில காபி சாகுபடியாளர் சங்கத் தலைவர் சகாதேவ பாலகிருஷ்ணா தெரிவித்தார்.